<u>2026 மார்ச் மாதம் 30– ஆம் தேதி திங்கட்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>O.S. நெம்பர் : 7/2016</u>

O.S. No.: 7/2016 – ராஜேந்திரன் DW2 30.03.2026

த/பெ.சொக்கலிங்கம்

<u>சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. எனது சொந்த ஊர் தேனி என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் 1 வது பக்கத்தில் கிரைய ஆவணங்கள் விபரங்கள் அறிந்தும், தெரிந்தும் வாதிகளின் முன் உரிமையாளரான சங்கரலிங்கம் என்பவரும் எனக்கு தெரியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கரலிங்கம் எனது ஊர்க்காரர் என்றால் எனது மாமனார் ஆவார். நாகப்பன், சங்கரலிங்கத்தின் தந்தை என்றால் சரிதான். நாகப்பனை பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

2. வா.சா.ஆ.6–ன்படி ஆதியில் நாகப்ப கவுண்டர் மற்றும் கெப்பண்ண கவுண்டர் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிராதின் நகல் வாங்கினேன் என்றால் சரிதான். பிராதில் வாதி அவரது வம்சாவளியை குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தலிருந்து வந்த வழக்குரையின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. வழக்கு சொத்தை தவிர்த்து வேறு நிலங்கள் உள்ளதா என்றால் 3 ஏக்கர் நிலங்கள் உள்ளன, எங்கள் அண்ணன், தம்பி மூன்று நபர்களுக்கு பாத்தியமாகும். ஜமீன் கிராமம் என்றால் சரிதான்.

3. எங்கள் மூன்று நபர்கள் பெயரிலும் பட்டா உள்ளன என்றால் சரிதான். சர்க்கார் கிராமத்தில் நிலங்களை எடுத்தப்போது யார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் எனது தந்தை பெயரில் கொடுக்கப்பட்டது, எனது தாத்தா இறந்துவிட்டார். வாதி சொத்து சம்பந்தமாக வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அழகர்சாமி, அழகேசன் முன்னால் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று விசாரித்தேனா என்றால் அழகேசனின் பாட்டிக்கு சொந்தமாகும், பெயர் தெரியாது. பி.வா.சா.ஆ.8 ன்படி பூர்வீகமாக பாட்டிக்கு பாத்தியப்பட்டு, தனக்கு கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

4. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் பிதுராஜியமாக என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாட்டியிடமிருந்து தனக்கு கிடைக்கப்பெற்றது என்பதை காட்ட பத்திரம் அழகேசன் காண்பித்தாரா என்றால் இல்லை, பட்டா பார்த்தேன். எனக்கு பட்டாவின் நகல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் அழகேசன் பெயரில் இருந்தது. வா.சா.ஆ.10 பட்டாவை என்னிடம் காண்பித்தார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.10 பட்டாவை பார்ப்பதற்கு முன்பு அழகேசனிடம் வேறு ஆவண்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் பல லட்சம் செலவு செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வாதி வா.சா.ஆ.1 பாகப்பத்திரம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதேபோன்று, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.12 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி தனது உரிமையை நிரூபிப்பதற்கு வா.சா.ஆ.1, வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7,

வா.சா.ஆ.12 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்திற்கு 30 வருடங்கள் வில்லங்கம் போட்டுப் பார்த்தேனா என்றால் 20 வருடங்களுக்கு பார்த்தேன். அந்த வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.8 எனது கிரைய ஆவணத்தில் சாட்சிகளாக யார் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சங்கரலிங்கம் மற்றும் குருசாமி ஆகியோர் ஆவார்கள். வாதி, சங்கரலிங்கம் கையொப்பம் செய்யவில்லை என்று கூறுகிறார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின் அசல் பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் உள்ளது, ஆவணத்தை வைத்து வங்கியில் கடன் வாங்கியுள்ளேன். வீடு கட்டுவதற்காக கட்டிட வரைபட அனுமதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், கட்டிட வரைபட அனுமதி என்னிடம் உள்ளது. Approved Lay out இல்லை என்றால் சரியல்ல.

7. 15ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றவர்கள் பல லட்சம் செலவில் கட்டியதாக நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு யார் செலவு செய்தார்கள் என்றால் பல நபர்கள் கட்டிடங்கள் கட்டியுள்ளார்கள். தாவா சொத்தில் எனக்கு விற்றவருக்கு பாத்தியமும் இல்லை, உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு விற்ற கிரைய பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியது வீடு கட்டிய விபரம் வாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல, வாதி வீடு

கட்டும்போது வந்து பார்த்தார், எனது கட்டிடத்தை கட்டிய கொத்தனாரை வைத்து அவரது கட்டிடத்தை கட்டினார்.

**இடைக்கால மனு எண்.11/2026, 30.03.2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டு, முதல்விசாரணை தொடர்ச்சி :–**

| | | | |
|---|---|---|---|
| 1. | 2003 முதல் 2026 வரையிலான காலங்களுக்கு தேனி மாவட்டம், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சியில் செலுத்திய வரி கேட்பு வசூல் நிலுவை நகல் | **பி.வா.சா.ஆ.10** | அசல் |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எவ்வளவு நிலம் வாங்கினேன் என்றால் 1250 சதுரடி ஆகும்.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 30.03.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.30 18:47:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
30.03.2026.